Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC.61/2019**

**வழக்கு சாட்சி எண். PW5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வெங்கடேசன் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | நடேசன் | தொழில் | : | |
| கிராமம் | : | மருதிப்பட்டி | சமயம் | : | |
| தாலுக்கா | : | அரூர் | வயது | : | 43 |

(1 முதல் 3, 5, 6 எதிரிகள் ஆஜர் இல்லை. 1 முதல் 3, 5, 6 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 4ம் எதிரி இறப்பு).

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **8th** Day of **June 2023.**

**முதல் விசாரணை**

நான் மருதிப்பட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். சுமார் 6 ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் காலை 8 மணியளவில் செட்ரப்பட்டிக்கு நான் இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது போலீசார் அங்கு விசாரித்துக்கொண்டிருந்தார்கள். அங்கு சம்பவயிடத்தை வரைபடம் வரைந்து அதற்கு சாட்சியாக என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். அதனால் நான் கையொப்பம் செய்தேன். என்னுடன் சேர்ந்து கோவிந்தன்

என்பவரும் கையொப்பம் செய்தார். (**பார்வை மகசர் அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு பற்றி எனக்கு தெரியாது. நான் கையொப்பம் போட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. சம்பவயிடத்திற்கு நான் சென்றபோது போலீசாரை தவிர வேறு யாரும் இல்லை.

**5, 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**

Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC.61/2019**

**வழக்கு சாட்சி எண். PW4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வெள்ளைமுருகன் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | மூக்காகவுண்டர் | தொழில் | : | |
| கிராமம் | : | செட்ரப்பட்டி | சமயம் | : | |
| தாலுக்கா | : | அரூர் | வயது | : | 41 |

(1 முதல் 3, 5, 6 எதிரிகள் ஆஜர் இல்லை. 1 முதல் 3, 5, 6 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 4 ம் எதிரி இறப்பு).

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **8th** Day of **June 2023.**

**முதல் விசாரணை**

நான் செட்ரப்பட்டியில் குடியிருந்து விவசாம் செய்து வருகிறேன். அசா.1 எங்கள் ஊர்கார் ஆவார். எதிரிகளை எனக்கு தெரியும். தேதி மாதம் நியாபகம் இல்லை. காலை சுமார் 10 மணியளவில் செட்ரப்பட்டி அருகே அசா1 முடியாமல் உட்கார்ந்திருந்தார். தன்னை மருத்துவமனைக்கு கொண்டு செல்லுமாறு சொன்னார். அவர் மட்டும்தான் இருந்தார். வேறு யாரும் இல்லை. அசா1 க்கு குடும்ப பிரச்சனை என்று சொன்னார். நான் அவரை எனது இருசக்கர வாகனத்தில் அழைத்துக்கொண்டு அரூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டுவந்தேன். பின்னர் நான் அங்கிருந்து சென்றுவிட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்களா

என்று எனக்கு நியாபகம் இல்லை.

**1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

அசா1ன் மகன்தான் எதிரி கையிலைமன்னன் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். போலீசார் இந்த வழக்கு சம்மந்தமாக என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

**5, 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**

Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC.61/2019**

**வழக்கு சாட்சி எண். PW3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வெற்றிச்செல்வன் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | ரங்கநாதன் | தொழில் | : | |
| கிராமம் | : | செட்ரப்பட்டி | சமயம் | : | |
| தாலுக்கா | : | அரூர் | வயது | : | 39 |

(1 முதல் 3, 5, 6 எதிரிகள் ஆஜர் இல்லை. 1 முதல் 3, 5, 6 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 4 ம் எதிரி இறப்பு).

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **8th** Day of **June 2023.**

**முதல் விசாரணை**

நான் செட்ரப்பட்டியில் குடியிருந்து விவசாம் செய்து வருகிறேன். அசா.1 என் பங்காளி ஆவார். எதிரிகளை எனக்கு தெரியும். சுமார் 6 வருடங்களுக்கு முன்பாக அப்பியம்பட்டி செல்லும் வழியில் மொரப்பூர் – செட்ரப்பட்டி போகும் வழியில் செட்ரப்பட்டி என்ற இடத்தில் அசா.1 ராஜி அவர் நிலத்தில் வீடு கட்ட பூமிப்பூஜை செய்வதற்காக போன் மூலம் தகவல் சொன்னார். அதனால் நான் காலை 7.00 மணிக்கு சென்றேன். அங்கு எதிரி கைலைமன்னனுக்கும் அசா.1 க்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. உடனே நான் அங்கிருந்து கிளம்பி விட்டேன். யாருக்கு அடிப்பட்டது என்று எனக்கு

தெரியாது. நான் யாரையும் மருத்துவமனைக்கு அழைத்துச்செல்லவில்லை. அங்கு சண்டை ஏற்பட்டது என்று கேள்விப்பட்டேன். அசா.2 சந்திராவிற்கு அடிப்பட்டது என்று கேள்விப்பட்டேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு பற்றி எனக்கு தெரியாது.

**5, 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**

Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC.61/2019**

**வழக்கு சாட்சி எண். PW2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சந்திரா | ஜாதி | : | |
| கணவர் பெயர் | : | ராஜி | தொழில் | : | |
| கிராமம் | : | செட்ரப்பட்டி | சமயம் | : | |
| தாலுக்கா | : | அரூர் | வயது | : | 58 |

(1 முதல் 3, 5, 6 எதிரிகள் ஆஜர் இல்லை. 1 முதல் 3, 5, 6 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 4 ம் எதிரி இறப்பு).

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **8th** Day of **June 2023.**

**முதல் விசாரணை**

நான் செட்ரப்பட்டியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். அசா.1 என்னுடைய கணவர். தேதி மாதம் ஞாபகம் இல்லை. சுமார் 7 வருடங்களுக்கு முன்பு செட்ரப்பட்டி பேருந்து நிலையத்தில் நானும் என் கணவரும் காலை 7.00 மணிக்கு வந்து கொண்டிருந்தோம். அப்போது எதிரி கைலைமன்னனும் தேவகியும் கல்லை எடுத்துக்கொண்டு 3 வருடம் கழித்து எதற்காக நீங்கள் வருகிறீர்கள் என்று கேட்டு என் கணவர் ராஜியை எதிரி கைலைமன்னன் கல்லால் அடித்தார். அதனால் அவருக்கு காலில் அடிப்பட்டு சத்தம் போட்டார். என்னை

கைலைமன்னனும் தேவகியும் அமுக்கிப்பிடித்து கல்லால் அடித்தார்கள். கைலைமன்னன் என்னை அடித்து கீழே தள்ளி ஜாக்கெட்டை கிழித்து கழுத்தில் இருந்த தாலி செயினை பிடிங்கிக்கொண்டு ஓடினார். தாலி செயினை எதிரி கைலைமன்னன் அவர் மனைவி ஜெகதீஷ்வரியிடம் கொடுத்துவிட்டார். அடிப்பட்ட எங்களை வெள்ளைமுருகன் மற்றும் வெற்றி ஆகியோர் அரூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச்சென்றார்கள். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். இந்த சம்பவத்தில் எனக்கு முதுகு எலும்பில் அடிப்பட்டது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்த தேதி ஞாபகம் இல்லை. சம்பவ நடந்த இடத்திற்கு அருகே வீடுகள் உள்ளது என்றால் சரிதான். கோபால் வீடு மற்றொரு கோபால் வீடு உள்ளது. சம்பவத்தை மேற்படி நபர்கள் பார்த்தார்கள். கோபால் மருமகள் ரமணி பார்த்தார். கூட்டமாக இருந்தார்கள். கூட்டத்தில் யார் யார் இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. போலீசார் விசாரணயில் சம்பவத்தை ரமணி மற்றும் கௌரி பார்த்தார்கள் என்று சொன்னேன். போலீசார் விசாரணயில் என் ஜாக்கெட்டை கிழித்து தாலி கொடியை கழற்றினார் என்று சொன்னேன். கைலைமன்னன் என் அக்கா மகன். அவருக்கு நாங்கள் சொத்து கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அவரை படிக்க வைத்ததும் என் கணவர்தான் என்றால் சரிதான். மருத்துவமனையில் மருத்துவர் என்னை விசாரித்தார். போலீசார் விசாரணயில் எத்தனை நபர்கள் என்னை அடித்தார்கள் என்று சொன்னேன். எனக்கு இரத்த காயம் ஏற்பட்டதா என்றால் இல்லை. நான் சொல்வது போல் சம்பவம் நடைபெற வில்லை என்றும், என் கணவருக்கும் என் அக்கா தேவகிக்கும் பிறந்த கைலைமன்னனுக்கு சொத்து கொடுக்ககூடாது என்பதற்காக என் கணவர் கொடுத்த பொய் புகாருக்கு

ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**5, 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**

Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC.61/2019**

**வழக்கு சாட்சி எண். PW1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜி | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | பெருமா கவுண்டர் | தொழில் | : | |
| கிராமம் | : | செட்ரப்பட்டி | சமயம் | : | |
| தாலுக்கா | : | அரூர் | வயது | : | 66 |

(1 முதல் 3, 5, 6 எதிரிகள் ஆஜர் இல்லை. 1 முதல் 3, 5, 6 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 4 ம் எதிரி இறப்பு).

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **8th** Day of **June 2023.**

**முதல் விசாரணை**

நான் செட்ரப்பட்டியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 03.06.2016 ம் தேதி காலை சுமார் 7.00 மணிக்கு முரசப்பட்டியில் பூமிப் பூஜை போட சென்றோம். நானும், என் மனைவி சந்திரா கந்தசாமி பழனியம்மாள் ஆகியோர் சென்றோம். ஒடுக்கன்கொட்டாய் என்ற இடத்தில் நாங்கள் சென்றுகொண்டிருந்தபோது எதிரி கைலை மன்னன் அவர் அம்மா தேவகி தூண்டுதலால் என்னை கல்லால் அடித்தார். என் மனைவியை எதிரி கைலைமன்னன் ஜாக்கெட்டை பிடித்து கிழித்தார். தாலி கொடியை பிடித்து இழுத்தார். நான்

என் மனைவியை காப்பாற்ற சென்றபோது என்னை அடித்து ஜல்லி கற்கள் மீது தள்ளி அடித்தார். என் மனைவியின் கழுத்தில் இருந்த தாலி எடுத்துச்சென்ற போது நான் பின்னால் ஓடினேன். அப்போது எதிரி கைலைமன்னன் கத்தியை காட்டி பின்னால் வந்தால் கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டினார். வெள்ளைமுருன் என்பவர் என்னையும் வெற்றிச்செல்வன் என் மனைவியையும் இருசக்கர வாகனத்தில் அரூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து வந்தார்கள். எதிரி தேவகி எதிரி கைலைமன்னன் என்னை அடிக்கும்போது அவரை அடிடா என்று தூண்டிவிட்டார். அரூர் அரசு மருத்துவமனையிலிருந்து மேல்சிகிச்சைக்காக தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். அங்கு நான் சிகிச்சையில் இருந்தபோது போலீசார் என்னை விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமுலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகார் வாக்குமூலம் அசாஆ.1 ஆகும். என் மனைவியிடம் இருந்து தாலி செயின் கழற்றியது பற்றி போலீசார் விசாரணயில் சொன்னோன். ஆனால் அதனை பதிவு செய்யவில்லை. அரூர் சார்பு நீதிமன்றத்தில் கைலைமன்னன் என் மீதும் என் மகளின் மீதும் சொத்தில் 5 ல் ஒருபாகம் வேண்டி வழக்கு தொடர்ந்திருந்தார். அந்த வழக்கு நிலுவையில் உள்ளது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவ நடந்த இடத்திற்கு அருகே வீடுகள் உள்ளது என்றால் சரிதான். தோட்டமும் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வீட்டில் உள்ள நபர்கள் சம்பவத்தை பார்த்தார்களா என்றால் இல்லை. கௌரி என்ற நபர் சம்பவத்தை பார்த்தார். மேற்படி விவரத்தை புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. புகார் வாக்குமுலத்தில் உள்ள விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். புகார் வாக்குமுலத்தில் உள்ள சங்கதிகள்தான் முதல்

விசாரணையில் சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான். எனக்கும் எதிரிகளுக்கும் என்ன நிலப்பிரச்சனை என்றால் எதிரி கைலைமன்னன் என் மூலமாக பிறந்தார் என்று சொல்லி அவர் என் சொத்துக்களில் பங்கு கேட்கும் காரணத்தினால் எனக்கும் எதிரிகளுக்கும் பிரச்சனை ஏற்பட்டது. நான் எதிரி கைலைமன்னனுக்கு 35 சென்ட் நிலம் கிரயம் கொடுத்தேன். அவர் வீடு கட்டுவதற்காக 35 சென்ட் நிலத்தை கிரயம் கொடுத்தேன். எனக்கு சம்பந்தமில்லாத கைலைமன்னனுக்கு எதற்காக 35 சென்ட் நிலம் கிரயம் கொடுத்தேன் என்றால் அவர் கஷ்டப்படுகிறார் என்று கிரயம் கொடுத்தேன். அவ்வாறு இல்லை என்றும் தேவகிக்கும் எனக்கும் பிறந்த மகன் கைலைமன்னன் என்பதற்காக அவருக்கு சொத்தை கிரயம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. கைலைமன்னை நான்தான் M.Sc., அக்ரி வரை படிக்க வைத்தேன். அவர் ஓசூரில் அக்ரி அலுவலராக வேலைப்பார்த்து வருகிறார். சம்பவ இடத்தில் கந்தசாமியும், பழனியம்மாளும் இருந்தார்கள் என்று போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். போலீசார் விசாரணயில் கைலைமன்னன் என் மனைவியின் ஜாக்கெட்டை கிழித்தார் என்று சொன்னேனா என்றால் சொன்னேன். மேலும் என் மனைவியின் தாலி கொடியை பிடித்து இழுத்தார் என்று போலீசார் விசாரணயில் சொன்னேனா என்றால் சொன்னேன். கத்தியை காட்டி மிரட்டினார் என்று போலீசார் விசாரணயில் சொன்னேனா என்றால் சொன்னேன். நான் அளித்த புகார் வாக்குமூலத்தில் கைலைமன்னன் கத்தியை காட்டி மிரட்டினார் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மருத்துவமனையில் மருத்துவர் என்னை விசாரித்தார். மருத்துவரிடம் என்னை 2 தெரிந்த நபர்கள் அடித்ததாக தெரிவித்தேன். எனக்கு உள் காயம் ஏற்பட்டது, என் மனைவிக்கு இரத்த காயம் ஏற்பட்டது. என் மனைவியின் ஆடைகளில் இரத்தம் படிந்ததிருந்தது. அதனை போலீசாரிடம் காட்டினேன். நான் முதல் விசாரணயில் சொன்ன தேதியில்

நடைபெற்ற சம்பவத்தின் அடிப்படையில்தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நான் புகார் வாக்குமூலம் கைலைமன்னன், தேவகி மற்றும் ஜெகதீஷ்வரி ஆகிய 3 நபர்கள் மீது கொடுத்தேன். 4ம் எதிரி பாஸ்கர் என் மனைவியின் அக்கா மகன். 5ம் எதிரி பிரதீஷ் என் மனைவின் தம்பி மகன். 6ம் எதிரி ஆறுமுகம் என் மனைவியின் தம்பி. 5ம் எதிரிக்கும், 6ம் எதிரிக்கும் நான்தான் வழக்கறிஞர் நியமித்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கு எனக்கு சரிவர ஞாபகம் இல்லை என்றால் சரிவர ஞாபகம் வரவில்லை. எதிரி கைலைமன்னன் உறவை ஏமாற்ற வேண்டும் என்பதற்காக பொய் புகார் அளித்து அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**5, 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**